முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

OS 392/2023

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02ஆம் நாள் வா.த.சா.2–ன் வாக்குமூலம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி. .ஜி.சுபத்திரா தேவி, எம்.எல்., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சீனுவாசன் | வயது | : | 55 |
| தந்தை/கணவர் பெயர் | : | கலியபெருமாள் | தொழில் | : | |
| கிராமம் | : | நெல்லிக்குப்பம் | ஜாதி | : | |
| தாலூக்கா | : | பண்ருட்டி | சமயம் | : | |
| மாவட்டம் | : | கடலூர் | | : | |

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –

முதல் முறை வந்த போது வக்கீல் என்னை நீதிமன்றத்திற்கு இன்று வர சொன்னார். அப்போது சம்மன் வரவில்லை. இந்த வழக்கு விவரங்கள் ஆனந்த் சொல்லி தான் எனக்குத் தெரியும். அக்ரிமெண்ட் எழுத ராகினி பெயரில் பத்திரம் வாங்கினார்கள். எத்தனை ரூபாய்க்கு பத்திரம் வாங்கினார்கள் என்று தெரியாது. எத்தனை பத்திரத்தில் எழுதினார்கள் என்று தெரியாது. எத்தனை ஸ்டாம்ப்பேப்பர் என்று தெரியாது. அக்ரிமெண்ட் எத்தனை பக்கங்கள் என்று எனக்குத் தெரியாது. அக்ரிமெண்டில் சாட்சி கையெழுத்து நான் போடவில்லை. எந்த இடத்தில் உள்ள சொத்திற்கு கிரைய உடன்படிக்கை ஏற்பட்டது என்றால் நெல்லிக்குப்பம், ரத்தினம்பிள்ளை தெருவில் உள்ள இடம். சர்வே எண் தெரியாது. நீள, அகலம் தெரியாது.

சொத்தின் மூலப்பத்திரத்தினை நான் பார்த்தது இல்லை. பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு உள்ளே நான் போகவில்லை. சார் பதிவாளர் அலவலகத்தின் உள்ளே யார் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்று நேரடியாக எனக்குத் தெரியாது. ஆனால் யார் யார் சாட்சியாக உள்ளே சென்றார்கள் என்று தெரியும். ஆனந்தன் எனக்கு 10 வருடங்களாக பழக்கம். உறவினர் இல்லை. எனக்கும் அவருக்கும் கொடுக்கல் வாங்கல் எதுவும் இல்லை. நான் ஆனந்தன் கேட்டுக்கொண்டதற்கிணங்க தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.